# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,422 — 1938 ம் ஹூ மார்கழிமீ 23 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரங்கள்.

**1927 ம் ஆண்டின் 27 ம் இலக்க இந்திய வேலையாட்களைப்பற்றிய சட்டம்.**

அறிக்கைப்பத்திரம் : 204.

தோட்டச்சம்பளக் காரியசபை, கொழும்பு.

1927 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சட்டத்தின் 8 (1) ம் பிரிவின்படி கொழும்பு அரசிறை வருமானப் பகுதியின் தோட்டச்சம்பளக் காரிய சபையார் 1939 ம் ஹூ ஜெனவரிமீ 27 ந் தேதி தங்களின் நியா யாதிகார எல்லைக்குள் உள்ள கீழ்ப் பகுதியிலும், மத்திமப்பகுதியிலும் உள்ள எல்லாத் தோட்டங்களில் இதற்கு முன்னே தீர்மானிக்கப்பட்ட ஆகக் குறைந்தவீதச் சம்பளங்களை மேற்கூறிய சட்டத்தின் 8 (3) ம் பிரிவினுற் கொடுக்கப்பட்ட அதிகாரத்தினைக்கொண்டு மாற்ற எண்ணி யிருப்பதை இத்தா லறிவிக்கப்படுகின்றது.

இக்காரியத்தில் சம்பந்தமுடைய எவரும் யாதும் சொல்லவேண்டு மென்று விரும்பினுல் தானும் சமுகமாயிருக்க எண்ணுகிறதைப்பற்றிக் காரியசபைத் தலைவருக்கு அறிவிக்க வேண்டும்.

ஆர். மொனிபெனி,
தோட்டச்சம்பளக் காரியசபைத் தலைவர், கொழும்பு.

கொழும்புக் கச்சேரி,
1938 ம் ஹூ டிசம்பர்மீ 19 ந் உ.

---

**1927 ம் ஆண்டின் 27 ம் இலக்க இந்திய வேலையாட்களைப்பற்றிய சட்டம்.**

அறிக்கைப்பத்திரம் : 208.

தோட்டச்சம்பளக் காரியசபை, மாத்தளை.

1927 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சட்டத்தின் 8 (1) ம் பிரிவின்படி மாத்தளை அரசிறை வருமானப் பகுதியின் தோட்டச்சம்பளக் காரிய சபையார் மாத்தளைக் கச்சேரியில் ஒரு கூட்டம் ஒன்று, 1939 ம் ஆண்டு தைமீ 30 ந் திகதி, திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தங்களின் நியாயாதிகார எல்லைக்குள் உள்ள கீழ்ப் பகுதியிலும், மத்திமப் பகுதி யிலும் உள்ள எல்லாத் தோட்டங்களில் இதற்கு முன்னே தீர்மானிக்கப் பட்ட ஆகக் குறைந்தவீதச் சம்பளங்களை மேற்கூறிய சட்டத்தின் 8 (3) ம் பிரிவினுற் கொடுக்கப்பட்ட அதிகாரத்தினைக்கொண்டு மாற்ற எண்ணி யிருப்பதை இத்தா லறிவிக்கப்படுகின்றது.

இக்காரியத்தில் சம்பந்தமுடைய எவரும் யாதும் சொல்லவேண்டு மென்று விரும்பினுல் தானும் சமுகமாயிருக்க எண்ணுகிறதைப்பற்றிக் காரியசபைத்தலைவருக்கு அறிவிக்க வேண்டும்.

ஆர். எச். டி. மெண்டேர்ஸ்,
தோட்டச்சம்பளக் காரியசபைத் தலைவர், மாத்தளை.

மாத்தளைக் கச்சேரி,
1938 ம் ஆண்டு மார்கழிமீ 19 ந் உ.

---

**1927 ம் ஆண்டின் 27 ம் இலக்க இந்திய வேலையாட்களைப்பற்றிய சட்டம்.**

அறிக்கைப்பத்திரம் இல. 209.

தோட்டச் சம்பளக்காரிய சபை. காலி.

1927 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சட்டத்தின் 8 (1) ம் பிரிவின்படி காலி அரசிறைவருமானப் பகுதியின் தோட்டச் சம்பளக்காரிய சபையார் 1939 ம் ஆண்டு ஜெனவரி மாசம் 18 தேதி தங்களின் நியாயாதிகார எல்லைக்குள் உள்ள கீழ் பகுதியிலும் மத்திமப் பகுதியிலும் உள்ள எல்லாத் தோட்டங்களில் இதற்கு முன்னே தீர்மானிக்கப்பட்ட ஆகக் குறைந்த வீதச் சம்பளங்களை மேற்கூறிய சட்டத்தின் 8 (3) ம் பிரிவினுற் கொடுக்கப்பட்ட அதிகாரத்தினைக்கொண்டு மாற்ற எண்ணியிருப்பதை இத்தா லறிவிக்கப்படுகின்றது.

இக்காரியத்தில் சம்பந்தமுடைய எவரும் யாதும் சொல்ல வேண்டு மென்று விரும்பினுல் தானும் சமுகமாயிருக்க எண்ணுகிறதைப்பற்றிக் காரிய சபைத்தலைவருக்கு அறிவிக்கவேண்டும்.

டபிள்யு. ஜே. எல். றெஜர்சன்,
தோட்டச் சம்பளக் காரியசபைத் தலைவர், காலி.

காலிக் கச்சேரி,
1938 ம் ஹூ டிசெம்பர்மீ 14 ந் உ.

---

**1927 ம் ஆண்டின் 27 ம் இலக்க இந்திய வேலையாட்களைப்பற்றிய சட்டம்.**

அறிக்கைப் பத்திரம் 210.

தோட்டச் சம்பளக்காரிய சபை மாத்தறை.

1927 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சட்டத்தின் 8 (1) ம் பிரிவின்படி மாத்தறை அரசிறை வருமானப் பகுதியின் தோட்டச் சம்பளக்காரிய சபையார் மொறவக்கையில் இருக்கும் மொறவக்கை கிளப்பில் 1939 ம் ஆண்டு பெப்புருவரிமீ 6 ந் திகதி காலை 10 மணிக்கு தங்களின் நியாயாதிகார எல்லைக்குள் உள்ள கீழ் பகுதியிலும் மத்திமப் பகுதியிலும்

உள்ள எல்லாத் தோட்டங்களில் இதற்கு முன்னே தீர்மானிக்கப்பட்ட ஆகக் குறைந்த வீதச் சம்பளங்களை மேற்கூறிய சட்டத்தின் 8 (3) ம் பிரிவினுற் கொடுக்கப்பட்ட அதிகாரத்தினைக்கொண்டு மாற்ற எண்ணியிருப்பதை இத்தா லறிவிக்கப்படுகின்றது.

இக்காரியத்தில் சம்பந்தமுடைய எவரும் யாதும் சொல்லவேண்டு மென்று விரும்பினுல் தானும் சமுகமாயிருக்க எண்ணுகிறதைப்பற்றிக் காரிய சபைத்தலைவருக்கு அறிவிக்கவேண்டும்.

ஆர். வை. டாணியல்,
தோட்டச் கம்பளக் காரிய சபைத் தலைவர் மாத்தறை.

மாத்தறைக் கச்சேரி,
1938 ம் ஆண்டு டிசெம்பர்மீ 20 ந் உ.

---

**1927 ம் ஆண்டின் 27 ம் இலக்க இந்திய வேலையாட்களைப்பற்றிய சட்டம்.**

**அறிக்கைப்பத்திரம் 213.**

தோட்டச்சம்பளக் காரியசபை, இரத்தினபுரி.

1927 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சட்டத்தின் 8 (1) ம் பிரிவின்படி இரத்தினபுரி அரசிறை வருமானப் பகுதியின் தோட்டச்சம்பளக்காரிய சபையார் 1939 ம் ஞூ மாசிமீ 4 ந் தேதி தங்களின் நியாயாதிகா எல்லைக்குள் உள்ள கீழ் பகுதியிலும் மத்திமப்பகுதியிலும் உள்ள எல்லாத் தோட்டங்களில் இதற்கு முன்னே தீர்மானிக்கப்பட்ட ஆகக் குறைந்த வீதச் சம்பளங்களை மேற்கூறிய சட்டத்தின் 8 (3) ம் பிரிவினுற் கொடுக்கப்பட்ட அதிகாரத்தினைக்கொண்டு மாற்ற எண்ணியிருப்பதை இத்தா லறிவிக்கப்படுகின்றது.

இக்காரியத்தில் சம்பந்தமுடைய எவரும் யாதும் சொல்லவேண்டு மென்று விரும்பினுல் தானும் சமுகமாயிருக்க எண்ணுகிறதைப்பற்றிக் காரிய சபைத்தலைவருக்கு அறிவிக்க வேண்டும்.

ஆர். எஸ். வீ. பொலியர்,
தோட்டச்சம்பளக் காரியசபைத் தலைவர், இரத்தினபுரி.

இரத்தினபுரிக் கச்சேரி,
1938 ம் ஞூ டிசம்பர்மீ 15 ந் உ.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் போமிறிய சிறு வெள்ளத்தடைக்கு, எல்லை இடம் மாற்றுவதற்கும் அணையுடன் ஒரு சிலுயிஸ் கட்டுதற்கும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர் சொல்லப்படும் காணிகளை அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 922. குறிச்சி—கொத்தளாவள (கடுவெல) போமிறிய பஹலவும்.

| துண்டு. | காணியின் பெயர் | விபரம். | உரித்தாளியின் பெயர் | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கல்கொற்றுவ .. | அணை, 10 வருஷஞ்சென்ற 2 கமுகுள்ளது | ஏ. எம். ஜேம்ஸ் டி. லனறேலின் நோனு, போமேறிய பஹல கடுவெல | 0 | 0 | 5·1 |
| 2 | ஷை .. | அணை .. .. | ஏ. எம் பபிலிஸ் டி லனறேல், போமிறிய பஹல, கடுவெல, இது போமிறிய பஹல எச். டி. லூவிஸ் குணசேகரவால் உரித்துப்பேசப்படுகிறது | 0 | 0 | 3·9 |
| 3 | ஷை .. | அணை .. .. | எச். டி. பாறேரன் குணசேகர, எச். டி. அசிலீன் குணசேகர, எச். டி. எமலீன் குணசேகர, எச். டி. ரெசலீன் குணசேகர எல்லோரும் போமிறிய பஹல, கடுவெல | 0 | 0 | 2·4 |
| 4 | ஷை .. | அணை .. .. | ஏ. எம். மக்கி நோனு டி லனறேல், போமிறிய பஹல, கடுவெல | 0 | 0 | 3·7 |
| 5 | ஷை .. | புல் நிலம், ஒரு அணையுள்ளது .. | ஏ. எம். பிருன்சிஸ் டி லனறேல், போமிறிய பஹல, கடுவெல | 0 | 0 | 7·4 |
| 6 | ஷை .. | புல் நிலம், 20 வருஷஞ்சென்ற 1 தென்னையும் ஒரு அணையுமுள்ளது | ஏ. எம். பபிலிஸ் டி லனறேல், போமிறிய பஹல, கடுவெல.. | 0 | 0 | 31·2 |
| 7 | பண்ணெக்கமுல்ல.. | றப்பரும், தென்னங் காணியும், 5 வருஷந்துவங்கி 12 வருஷம்வரை சென்ற றப்பர் மரமும், 5 வருஷஞ்சென்ற 4 பலாவும், 1 ஹிக்மரமும், 1 கதுறுமரமும், 3 வருஷஞ்சென்ற 1 தென்னையும், 30 வருஷஞ்சென்ற 6 தென்னையும், 1 அற்றிக்காமரமும், 12 வருஷஞ்சென்ற 1 கதுறு மரமும், கட்டடத்துக்காக ஒரு கற்றிங்கும் ஒரு அணையுமுள்ளது | கே. ஏ. அப்புசிங்ஹோ பெறேரு, கொத்தளாவள, கடுவெல இது கடுவெல ஜே. ஏ. யொஹானிஸ், ஜே. ஏ. இந்தசேன, ஜே. ஏ. உப்சேன, ஜே. ஏ. பொடிஹாமினேயால் உரித்துப் பேசப்படுகிறது | 1 | 2 | 27·5 |
| 8 | டியாபின்ன .. | புற்தறை .. .. | கே. ஜே. பி. குணவர்தன, கடுவெல .. .. | 0 | 0 | 2·3 |
| 9 | ஷை .. | தென்னங்காணி, 5 வருஷஞ்சென்ற 1 றுக் மரமும், 35 வருஷஞ்சென்ற 1 பலாவும், 4 தென்னையும், 25 வருஷஞ்சென்ற 1 ஈரப்பலாவும், 12 வருஷஞ்சென்ற 9 கமுகுவும் ஒரு அணையுமுள்ளது | ஷை .. .. .. | 0 | 0 | 2·3 |
| 10 | றடகேவத்த .. | தென்னங்காணி, மக்கிரேட்டும், 20 வருஷஞ்சென்ற 3 பலாவும், 15 வருஷஞ்சென்ற 1 தென்னையும், ஒரு கட்டடப் பாலத்தின் பகுதிகளும், ஒரு அணையுமுள்ளது | கே. ஏ. அப்புசிங்ஹோ, பெறேரு கொத்தளாவள, கடுவெல ... | 0 | 0 | 5·1 |
| 11 | ஷை .. | புற்தறை, ஒரு கட்டடப் பாலத்தின் பகுதியும் ஒரு அணையுமுள்ளது | கே. ஜே. பி. குணவர்தன, கடுவெல .. .. | 0 | 0 | 7·5 |
| 12 | ஷை .. | அணை .. .. | ரி. கே. மாற்றின், கடுவெல .. .. | 0 | 0 | 0·8 |
| 13 | ஷை .. | அணை .. .. | ஆர். எல். ஆறேரன் டயஸ், கே. மகேறிஸ், இருபேரும் கடுவெல | 0 | 0 | 4·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி. 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஞூ (பெப்ருவரி) மாசி மாசம் 1 ந் தேதியிலன்று 9.30 மணிக்கு கடுவெல வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1938 ம் ஞூ (டிசெம்பர்) மார்கழிமீ 20 ந் உ.

ஆர். மொனிபெனி,
உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஆு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் வெளி நோயாளி டிப்பாட்மென்றுக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது, :—

பிரதமபடத்து இல : A 907. குறிச்சி—மருதானை தெற்கு, கொழும்பு நகரசங்க எல்லைக்குள்.

| துண்டு. | காணியின் பெயர் | விபரம். | உரித்தாளியின் பெயர் | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | றீஜென்ற் தெருவில் இறைவரி இலக்கம் 55 ம் டி. சேறம் பிளேசில் இறைவரி இலக்கம் 100,100/1 100/10 வரையும் டீன்ஸ் ரேட்டில் இறைவரி இலக்கம் 481 ன் பகுதியும் றீஜென்ற் தெருவில் இறைவரி இலகம் 19 ன் பகுதியும் உள்ளது | தோட்டம், 40 வருஷந்துவங்கி 50 வருஷம்வரைசென்ற 245 தென்னையும், 50 வருஷஞ்சென்ற 2 பட்ட தென்னையும், 20 வருஷஞ்சென்ற 2 பலாவும், 6 வருஷஞ்சென்ற 2 பலாவும், 3 வருஷமும் 20 வருஷமுஞ்சென்ற 2 ஈரப்பலாவும், 4 வருஷந்துவங்கி 6 வருஷம்வரைசென்ற 9 மாவும், 30 வருஷஞ்சென்ற 2 மாவும், 6 வருஷஞ்சென்ற 1 கமுகும், 15 வருஷஞ்சென்ற 1 கசுமரமும், 15 வருஷஞ்சென்ற 1 உக்குறேசமரமும், 12 வருஷஞ்சென்ற 2 மாசன் மரமும், 20 வருஷஞ்சென்ற 1 பெலிமரமும், 30 வருஷஞ்சென்ற 1 புலுன்மரமும் 20 வருஷஞ்செல்ற 2 கும்புக்மரமும், 12 வருஷஞ்சென்ற 1 கிற்றுல் மரமும், 10 வருஷந்துவங்கி 15 வருஷம்வரைசென்ற 5 சூரியமரமும், 5 வருஷந்துவங்கி 8 வருஷம்வரைசென்ற 7 முருங்கையும், 8 வருஷஞ்சென்ற 8 கொற்றும்ப மரமும், 20 வருஷஞ்சென்ற 1 பலோல் மரமும், 20 வருஷஞ்சென்ற 1 கமறங்க மரமும், 15 வருஷஞ்சென்ற 1 பொம்பிமரமும், 10 வருஷமும் 15 வருஷமுஞ்சென்ற 2 ரெலம்புமரமும், 10 வருஷஞ்சென்ற 1 றுக்கறஞ்ன மரமும், 3 வருஷஞ்சென்ற 1 டவாற்ற மரமும், 59 வாழை அடிகளும், 10 வருஷமும் 35 வருஷமுஞ்சென்ற 2 பொது மரங்களும் ஒரு ஓட்டுக்கட்டடமும், 1 தகர இரும்புக்கொட்டிலும், 1 சீமெந்து தூசிப்பெட்டியும், 1 கட்டடப் பாலமும், ஓட்டாலும் தகரத்தாலும் வேய்ந்த 1 மண் கட்டடமும், 2 தகர மண்கட்டடங்களும், ஒரு தகரக் கொல்லர் பட்டடையும், 1 தகரக் கட்டடக் கற்கூசும், 1 தண்ணீர் இராப்பும், 1 தகரக் கட்டடக் கற்கூசின் பகுதியும், தகா இராங்குள்ள ஒரு கட்டடத்தூணும், ஒரு பம்புள்ள மூடிய கட்டடக்கிணறும் (கைவிடப்பட்டது) ஒரு சீமெந்துத் தொட்டியும், ஒரு தளிசைபண்ணிய தரையும், 1 கட்டடக் கானும், தகரத்தால் வேய்ந்த மரக் கார்க்கொட்டகையின் பகுதியும், 3 கட்டடக் கான்களின் பகுதிகளும், 5 இரும்புக்கம்பி உய் வேலியும், ஒரு இரும்புக்கம்பி வேலியும், 2 படலையுள்ள 4 படலைத் தூண்களும் ஒரு கட்டடச் சுவருமுள்ளது | டி. எஸ். சி. பேதிறிஸ், 481 டீன் ஸ்ரேட்டு, கொழும்பு அல்லது சில்வகண்டே எஸ்றேற், குருணக்கல், மிஸ். ரிறிக்சி லலிதா பேதிறிஸ், அங்கொடையில் விசர் ஆஸ்பத்திரியில் இருப்பவர், டி. ஜீ. எல். முனிசிங்ஹவின் நோனுவும், எம். இ. முனசிங்ஹவும் இருபேரும் இலக்கம் 71, தட்டாரத்தெரு, கொழும்பு, (பொது உரித்து | 4 | 1 | 5·40 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவுரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஆு (பெப்ருவரி) மாசி மாசம் 6 ந் தேதியிலன்று 10 மணிக்கு இந்தக்கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1938 ம் ஆு (டிசெம்பர்) மார்கழிமீ 20 ந் உ.

டபிள்யு. ஈ. ஒப்டே,
அரசாட்சி ஏசண்டு.

———

1876 ம் ஆு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் சுடுதண்ணீர்க் குளிக்குமிடமொன்றுக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர் சொல்லப்படும் காணியை அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 527. குறிச்சி—கண்டி நகரசங்கத்து எல்லைக்குள்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | பேராதெனி ரேட்டில் 27 ம் இலக்கத்தின் பாகம் | வரிப்பண. 15 வருஷ வயதுள்ள மூங்கிலுள்ள வெறும் நிலம் | அக்குறணையில் வசிக்கும் ஐ. எஸ். முஹம்மது | 0 | 0 | 1·08 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஆு (ஜனவரி) தைமீ 31 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1938 ம் ஆு (டிசம்பர்) மார்கழிமீ 20 ந் உ.

எச். சீ. கொக்ஸ்,
உதவி, அரசாட்சி ஏசண்டு.

———

1876 ம் ஆு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அரியாலையில் அரசாட்சியாரின் பள்ளிக்கூடத்துக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 1,212 குறிச்சி—அரியாலை.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கரையான் கட்டுத்திடல்.. | நிலதரமான பள்ளிக்கூடக் கட்டடமுள்ள பனந்தோட்டம்.. | சிவியாதெரு உடையார், முருகேசு முத்துச்சாமி | 1 | 0 | 14 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஆு (ஜனவரி) தைமீ 30 ந் தேதியிலன்று 11 மணிக்கு யாழ்ப்பாணக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படிக்கும் அக்காணியைப் பற்றிய உறுதிகளைக்கொண்டுவந்து காட்டும்படிக்கும் இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1938 ம் ஆு (டிசம்பர்) மார்கழிமீ 17 ந் உ.

றீ. பி. நெயிஷ்,
வடமாகாண அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஆண்டு 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பௌத்த சமய பிரேத சேம காலை என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டிய தான பின்னர்ச் சொ[illegible]டும் காணியை, அஃதாவது :—

பிரமதபடத்து இல : A 582. குறிச்சி—டும்மல்டெனிய கிழக்கு.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | மைலகஹவத்தை .. | 70 வயதுள்ள 4 தென்னைகளும், 3 வயதுள்ள 2 தென்னைகளும், 3 வயதுள்ள 1 மாமரமு முள்ள தென்னந்தோட்டம் | (1) மக்கண்டாரு குடி றனசிறினேலிஸ் றனசிங்ஹ, (2) தொஸ்வத்த குடி குமாரசிங்ஹ ஹெற்றி ஆராச்சிகே சைமொன் பெறேரு, (3) தம்பகல்ல குடி. குமாரசிங்ஹ. ஹெற்றி ஆராச்சிகே சொபலிஞஹாமி (4) வீரஹேனகுடி தம்மஹெற்றிமுதலிகே செலஸ்தீனு, (5) வீர ஹேன குடி தம்மஹெற்றிமுதலிகே கிறிஸ்தீனு, (6) வீரஹேனகுடி தம்மஹெற்றிமுதலிகே எலிசாஹாமி, (7) கலயாயகுடி தம்மஹெற்றி முதலிகே சார்லிஸ் பீரிஸ், (8) உடுபட்டாவகுடி தம்மஹெற்றிமுதலி கே ஆபிரஹாம் பீரிஸ், (9) கட்டிமஹான குடி தம்மஹெற்றிமுதலி கே லோறென்ஸ் பீரிஸ், (10) டும்மலடெனிய குடி தம்மஹெற்றி முதலிகே ஜோன் பீரிஸ், (11) டும்மலடெனிய குடி தர்மலங்கார திஸ்சா தேரோ, (12) டும்மலடெனிய குடி தர்மஹெற்றிமுதலிகே கொர்ரேலிஸ் பீரிஸ், (13) டும்மலடெனிய குடி தம்மஹெற்றி சில் வெஸ்திரி பீரிஸ், (14) டும்மலடெனிய குடி தம்மஹெற்றி கரோலிஸ் பீரிஸ், (15) டும்மலடெனிய குடி தம்மஹெற்றி யங்கோ நோனு, (16) டும்மலடெனிய குடி தம்மஹெற்றி இசபெல்லா பீரிஸ், (17) டும்மலடெனிய குடி தம்மஹெற்றி யுஸ்தினு பீரிஸ் | 1 2 24·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஆண்டு (ஜனவரி) தை மாசம் 18 ந் தேதியன்று காலை 9 மணிக்கு மாறுவில்லா சேர்க்குட் பங்களாவில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

புத்தளம் கச்சேரி,
1938 ம் ஆண்டு (டிசெம்பர்) மார்கழிமீ 19 ந் உ.

ஜே. லேட்.
உதவி அரசாட்சி ஏசண்டு.

## சுப்பிறீங்கோட்டு அறிவித்தல்.

**இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படிநாம் பிரசித்தப்படுத்துவதாவது : கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற் சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் இரத்தினபுர அவிசாவலை டிஸ்திறிக்கைசேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1939 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 10 ந் திகதியாகிய செவ்வாய்க்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும். ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்க ளெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.**

இங்ஙனம்,

இரத்தினபுர பிஸ்கால் கந்தோர்,
1938 ம் ஆண்டு டிசெம்பர்மீ 14 ந் உ.

ஆர். எஸ். வீ. பொலியர்,
சபரகமுவா மாகாண பிஸ்கால்.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.